செ.வெ.எண்.57 நாள்:22.04.2017

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வறட்சி மற்றும் குடிநீர் வினியோகம் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக சாரல் அரங்கில் திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சி மற்றும் குடிநீர் வினியோகம் தொடர்பாக அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தலைமையில் இன்று (22.04.2017) நடைபெற்றது. இக்கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மை செயலாளர் முனைவர் ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன், திருமதி.விஜிலா சத்தியானந்த் மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொதுமக்களுக்கு அடிப்படை தேவைகளை முழுமையாக நிறைவேற்றிட தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகம் இந்தியாவில் முன்னோடி மாநிலமாக தெடர்ந்து விழங்கிட தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள். தமிழகத்தில் முதன்மை மாவட்டமாக நமது மாவட்டம் திகழ்த்திட அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். பருவ மழை பொய்த்ததன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சியால் பாதிப்பு அதிகமாக உள்ளது. மேலும் குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. இது போன்ற இக்கட்டான நேரங்களில் ஒரு பிரச்சனையை தீர்க்க ஏதேனும் தடை ஏற்பட்டால் மாவட்ட ஆட்சித் தலைவரிடமோ, அமைச்சரிடமோ உடனடியாக கவனத்திற்கு கொண்டு வந்தால் உடன் மேல்நடவடிக்கை எடுக்க இயலும். குடிநீரைப் பொருத்தவரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் நகர் மற்றும் கிராம ஊராட்சி பகுதிகளுக்கு சீராக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நிதி ஒதுக்கீடு ஏதும் தேவை எனில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் துறை அமைச்சர்களிடம் பேசி பெற்றுத் தர ஏற்பாடு செய்யப்படும். பொதுமக்களும் குடிநீரை சிக்கனமாக பயன்படுத்திட தேவையான விழிப்புணர்வுகளை ஏற்ப்படுத்திட வேண்டும். உள்ளாட்சி பிரதிநிதிகள் இல்லாத நிலையில் அலுவலர்கள் நேரடியாக சென்று பணிகளை ஆய்வு செய்திட வேண்டும். பணிகளை கண்காணிக்க வேண்டும். மாகாத்மாகாந்தி தேசிய வேலை உறுதித்திட்டத்தின் கீழ் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடன் பணிகளை துவக்கிட வேண்டும் இதன் மூலம் சிரமப்படும் அப்பகுதி மக்களுக்கு ஒரு உதவியாக இருக்கும். மேலும் ஊரக வளர்ச்சி முகமையின் மூலம்

செயல்படுத்தப்படும் திட்டங்களை விரைந்து முடிக்க வேண்டும். நகராட்சி ஆணையர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் உள்ளிட்டோர் திங்கட்கிழமை தோறும் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து தீர்வுகளை வழங்க வேண்டும் அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சியால் பொதுமக்கள் எவ்வித வகையில் பாதிப்பு அடையாத வகையில் சிறப்பாக பணியாற்றிட வேண்டும்.

முன்னதாக மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் 40 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.58690 வீதம் மொத்தம் ரூ.23,47,600 மதிப்பிலான இணைப்பு சக்கரங்கள் பொறுத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, மாநகராட்சி ஆணையாளர் திரு.சிவசுப்பிரமணியன், வருவாய் கோட்டாட்சியர்கள் (திருநெல்வேலி) திருமதி.மைதிலி, (தென்காசி) திரு.வெங்கடேஷ், தமிழ்நாடு கூட்டுறவு மாநில துணைத் தலைவர் திரு.கனேஸ்ராஜ், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணைய துணைத்தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜீ, ஆவின் தலைவர் திரு.ரமேஷ், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.ஆறுமுகம் முக்கிய பிரமுகர்கள் திரு.சுதா.கே.பரமசிவம், திரு.பரணி சங்கரலிங்கம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.